# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda<br>(URGENT MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 18.12.2019 | 377. 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (திருத்தப்பட்டுள்ளபடி) பிரிவு–15ன் கீழ் இதனடியில் குறிப்பிட்டுள்ள செலவினம் மற்றும் வேலையினத்தினை கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக பணியின் அவசர அவசியம் கருதி, உள்ளூர் ஒப்பந்ததாரர்கள் / நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு டி.ஜெயக்குமார், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களால் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | பதிவு செய்யப்பட்டது |

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட செலவினம் அல்லது வேலை | பிரிவு–15ன் கீழ் அனுமதி அளிப்பதற்கான காரணங்கள் | உத்தேச செலவினத் தொகை | தேதி |
|---|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள திருமானூர் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்தில் இருந்து வெண்ணாறு நீரேற்று நிலையம் வரை குடிநீர் பிரதான குழாய்களில் 7 இடங்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரி செய்யும் பணி | 1.கண்டியூர் பெருமாள் கோவில் அருகில் 2.கண்டியூர் யமஹா ஷோரூம் அருகில் 3. எம்.ஜி.ஆர். தியேட்டர் அருகில் 4. அம்மன்பேட்டை பவதாரணி ராமகிருஷ்ணர் கோவில் அருகில் 5. நடுக்கடை மெயின் ரோடு அருகில் 6 மற்றும் 7.பள்ளியக்ரஹாரம் மெயின் ரோட்டில் இரண்டு இடங்களில் அமைந்துள்ள குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு அதிக அளவு தண்ணீர் வெளியேறி வீணாகி வருவதுடன், மக்களுக்கு குடிநீர் விநியோகம் சரிவர செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும் இப்பிரச்சினை தொடர்பாக கண்டியூர் பகுதியில் உள்ள பொது மக்களிடம் இருந்து தினசரி தொலைபேசி புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. மேலும் இப்புகார்களை உடனடியாக சரி செய்து சீரான முறையில் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் அனைத்து துறை தலைவர்களுக்கான வாராந்திர சிறப்பு ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. எனவே பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் இப்பணியின் அவசியம் அவசரம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | ரூ.4,20,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) | 17.07.2019 |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.10777/2019/எம்சிஇ4)

<table>
<tr>
<td>18.12.2019</td>
<td>
378. இம்மாநகராட்சியில் வார்டு எண்.45 பூக்கார விளார் ரோடு, கே.வி.கே.சாமி மாநகராட்சி சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கீழ்கண்டுள்ள ஆடுவதை செய்யும் இடத்திற்கான கட்டண வசூல் உரிமம் 2019–2022ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் விட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>இனம்</th><th>ஏல பொறுப்புத் தொகை ரூ.</th><th>சொத்து மதிப்பு சான்று ரூ.</th><th>சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாத கூடுதல் பொறுப்பு தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>புதியதாக கட்டப்பட்ட பூக்கார விளார் ரோடு, கே.வி.கே.சாமி சந்தை ஆடுவதை செய்யும் உரிமம்</td><td>75,000/–</td><td>2,00,000/–</td><td>1,00,000/–</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u>
அ) மேற்கண்ட ஆடுவதை செய்யும் உரிமம் 2019–2022ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் விடவும், மேற்படி ஏலத்திற்கு மேற்படி ஆண்டிற்கான ஏல விதிகளுக்கு உட்பட்டு ஏலம் விடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட ஆடுவதை செய்யும் இடம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கான பொது ஏலம் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று பொது ஏலம் விட அனுமதி வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.14988/2019/எம்சிஏ5)
</td>
<td>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>18.12.2019</td>
<td>
379. திரு R.அழகர்சாமி, முன்னாள் நகராட்சி மேலாளர் (ஓய்வு) அவர்கள் WP (MD) No.19804/2019 வழக்கு தொடர்ந்துள்ளார். அரசு வழக்கறிஞர் இவ்வழக்கு சம்பந்தமாக எதிர் வாதுரை தயார் செய்து அனுப்பிய கட்டணம் ரூ.5,000/– கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையினை அரசு வழக்கறிஞருக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு:</u>
மாமன்றப் பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9705/2018/சி1)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>18.12.2019</td>
<td>
380. இம்மாநகராட்சியில் வெண்ணாறு, திருமானூர் மற்றும் கணபதி நகர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்த ஒப்பந்ததாரர் திரு J.சீனிவாசன் என்பவரால் தொடர்ந்த வழக்கு எண்.WP.MD.12785/2018 தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் திரு N.தீலிப்குமார், வழக்கறிஞர் என்பவர் ஆஜராகி மாநகராட்சியின் சார்பில் எதிர் வாதுரை தயார் செய்தல் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் போன்ற செலவினத் தொகை ரூ.10,000/– வழங்கக்கோரி தனது 28.08.2018 தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். இதன்படி மேற்கண்ட கட்டணத்தை அன்னாருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணத்தை பொது நிதியில் இருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1624/2016/எம்சிஇ1)

18.12.2019

381. இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில் உள்ள பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தளவாடப் பொருட்கள் பொது ஏலம் மூலம் உள்ளவை உள்ளபடியே பொருட்களை எடுத்துச்செல்லும் பணிக்கு 25.11.2019 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு உயர்ந்தபட்ச ஏலம் கோரி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்களின் பெயர் | உயர்ந்த பட்ச ஏலத்தொகை ரூ. (1 கிலோவிற்கு) |
|---|---|---|
| 1. | திரு ஜி.பழனிகுமார், பி.செல்வகணேஷ் & கோ, எண்.871, வண்டிப்பேட்டை, கீழவாசல், தஞ்சாவூர் | 15.32/– |
| 2. | திரு எம்.குணசேகரன், வசந்த் ஸ்டில், எண்.61, வண்டிப்பேட்டை, கீழவாசல், தஞ்சாவூர் | 15.08/– |
| 3. | திரு எம்.வெள்ளைச்சாமி, ஸ்ரீ அங்கு லட்சுமி ஸ்டில், எண்.874/55, வண்டிப்பேட்டை, கீழவாசல், தஞ்சாவூர் | 15.31/– |
| 4. | திரு ஏ.அய்யப்பன், ஐயப்பா டிரேடர்ஸ், எண்.874பி, வண்டிப்பேட்டை, கீழவாசல், தஞ்சாவூர் | 15.09/– |
| 5. | திரு எம்.பஞ்சாசாரம், எண்.36ஏ, தோணித்துறை தெரு, நாகப்பட்டினம். | 15.13/– |
| 6. | திரு எம்.பாலுச்சாமி, விநாயகர் ஸ்டில்ஸ், தோடி வீதி, நாகப்பட்டினம் | 15.05/– |
| 7. | திரு ஆர்.சுப்பிரமணியன், எண்.15/6, காரைக்கால், காரைக்கால் | 15.22/– |
| 8. | திருமதி சாந்தி மீனா, எண்.48, வெளிப்பாளையம், நாகப்பட்டினம் | கேள்வி கேட்கவில்லை |

மேற்கண்டவாறு வரப்பெற்ற பொது ஏல தொகையில் கூடுதலாக ரூ.15.32/– உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரியுள்ள திரு ஜி.பழனிகுமார், பி.செல்வகணேஷ் & கோ, எண்.871, வண்டிப்பேட்டை, கீழவாசல், தஞ்சாவூர் என்பவருக்கு வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) கூடுதலாக பொது ஏல ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு ஜி.பழனிகுமார், பி.செல்வகணேஷ் & கோ, எண்.871, வண்டிப்பேட்டை, கீழவாசல், தஞ்சாவூர் என்பவரது தொகை ரூ.15.32/– மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) மாமன்ற தீர்மானம் எண்.310, நாள் 29.11.2019ன்படி அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி உள்ளதற்கும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.12935/2019/எம்சிஇ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>18.12.2019</td>
<td>
382. Mission Director, National Health Mission, Tamilnadu அவர்களின் கடித ந.க.எண்.1869/NUHM/SHS/2017, நாள் 19.05.2017ன்படி இம்மாநகராட்சி கரந்தை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய கட்டிடம் கட்ட ரூ.60.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு ரூ.50.00 இலட்சத்திற்கு கட்டுமான பணிகள் முற்றிலும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி கட்டிடத்தில் மதிப்பீட்டில் வகை செய்யப்படாத பாதாள சாக்கடை இணைப்பு பணிகள், அலுமினியம் Partition பணிகள், Paver Block, குளிர்சாதன வசதிகள் மற்றும் கூடுதல் பணிகள் செய்ய ரூ.10.00/– இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு இம்மாமன்ற தீர்மானம் எண்.309, நாள் 29.11.2019ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மாமன்ற முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு N.துரைராஜன்,<br>ஒப்பந்ததாரர், தஞ்சாவூர்</td><td>8,34,423.57</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட (–) 0.11% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு G.யுவராஜா,<br>ஒப்பந்ததாரர், தஞ்சாவூர்</td><td>8,38,514.27</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட (+) 0.38 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–20 வருட திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து திட்ட நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (–) 0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு N.துரைராஜன், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
4) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8059/2016/எம்சிஇ1)
</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 18.12.2019 | 383. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் 2019–20ஆம் ஆண்டு உரிமம் புதுப்பிப்பதற்கு மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து இசைவாணைக் கட்டணம் (Consent Fees) Water act-க்கு ரூ.66,780/–ம், Air Outlet-க்கு ரூ.66,780/–ம் ஆக மொத்தம் ரூ.1,33,560/– செலுத்த மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தஞ்சாவூர் கடித எண்.F.TNJ0014/RM/DEE/TNPCB/TNJ2019, நாள் 26.11.2019–ன்படி தொகை ரூ.1,33,560/–ஐ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மேற்படி தொகை செலுத்தப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>4) மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தஞ்சாவூர் கடித எண். F.TNJ0014/RM/DEE/TNPCB/TNJ2019, நாள் 26.11.2019 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.320/2017/எம்சிஇ2) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 18.12.2019 | 384. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3 சுங்கான்திடல் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் மேற்கூரைப்பகுதி, பள்ளிச்சுவர்கள் ஆகியவை மிகவும் மோசமாக இடியும் நிலையில் காணப்படுகிறது. மேலும் அங்கு பயிலும் மாணவர்களுக்கு உரிய முறையில் குடிநீர் வசதி வழங்க தண்ணீர் தொட்டியும் இல்லை. எனவே மேற்படி அங்கன்வாடி மையத்தின் பழுதடைந்துள்ள மேற்கூரைப்பகுதி, பள்ளிச்சுவர் ஆகியவற்றை சீரமைப்பதற்கும், குடிநீர் வசதி, மின் வசதி ஆகியவைகளை ஏற்படுத்த தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/–ஐ (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.15829/2019/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 18.12.2019 | 385. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெண்ணாறு தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 3 எண்ணம் Chlorine Gas Plantகளுக்கு 900 Kg எடை உள்ள Chlorine Gas Cyliner 20 எண்ணிக்கை (2019–20ம் ஆண்டுக்கு) வாங்கி பொருத்தும் பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,50,000/–ஐ (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,50,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.15382/2019/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 18.12.2019 | 386. | இந்து சமய அறநிலையத்துறை, அருள்மிகு பெருவுடையார் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு கூட்டம் நாள் 22.11.2019ன்படி, தஞ்சை பெரியகோவில் திருக்குடமுழுக்கு விழா சுமார் 20 வருடங்களுக்கு பிறகு நடைபெற உள்ளதால், இவ்விழாவிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள், பொது மக்கள், பிரமுகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள், வெளி நாட்டவர்கள் வருகை தர உள்ளனர். மேலும் இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பொது மக்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர் வசதியினை செய்து தர வேண்டியுள்ளதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி 50 எண்ணிக்கையிலான 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPVC Water Tank வாங்கி பொருத்தும் பணியினை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/–ஐ (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/–க்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.14668/2019/எம்சிஇ4) | |
| 18.12.2019 | **387.** தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் III வார்டு எண்.30 சாலக்காரத் தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (Sewerage Treatment Plant) அமைக்கப்பட்டுள்ள 300 KVA திறன் உடைய ஜெனரேட்டர் கடந்த வருடங்களாக பழுதடைந்து உள்ளதால் மின்சார விநியோகம் துண்டிப்பு ஏற்படும் சமயங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்படாமல் நேரடியாக சமுத்திரம் ஏரியில் கலந்து பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் சமுத்திரம் ஏரி மாசடையும் சூழ்நிலையும் உருவாகிறது. எனவே பழுதடைந்துள்ள 300 KVA திறன் உடைய ஜெனரேட்டரை பழுதுபார்த்து சர்வீஸ் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,56,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,56,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019-2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.14931/2019/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 18.12.2019 | **388.** நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1391/2019/WB, நாள் 03.10.2019ம் தேதிய கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு விதமான திட்டப்பணிகள் மற்றும் அலுவல் பணிகள் தொடர்பாக ஆய்வுக்கூட்டங்களை காணொளி கலந்தாய்வு (Video Conference) மூலம் நடத்துவதற்கு ஏதுவாக காணொளி கலந்தாய்வு பிரத்யேக அறை அமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே காணொளி கலந்தாய்வு பிரத்யேக அறை, மின்கலன் மற்றும் மின் விசிறி ஆகியவைகளை அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,65,000/-ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,65,000/—க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் Roc.No.1391/2019/WB, நாள் 3.10.19 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.11403/2019/எம்சிஇ4) | |
| 18.12.2019 | 389. | இம்மாநகராட்சியின் உள்ளாட்சி தேர்தல் பிரிவில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கென்று இணைய தள வசதியுடன் கூடிய கணினி 2 எண்ணிக்கை, ஸ்கேனர் வசதியுடன் கூடிய பிரிண்டர் 1 எண்ணிக்கை மற்றும் Tonner-20 எண்ணிக்கையிலான உபகரணங்களை உதவி திட்ட அமைப்பாளர் அவர்களின் 7.11.2019 தேதிய Technical Specification குறிப்பின்படி (Branded i3 கணினி (4 GB RAM, ITB HDD, ODD, 18.5" LED Monitor, 1 KVA UPS), All in One Printer, Compatible 12 A Tonner Catridge மற்றும் Scanner) வாங்கி பொருத்தும் பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3,44,000/—ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,44,000/—க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.12013/2019/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 18.12.2019 | 390. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.35ல் அமைந்துள்ள நவநீதபுரம் பகுதியில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டிடம் கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. மேற்படி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முகப்பு பகுதியில் உள்ள முக்கிய சாலை / இணைப்பு சாலைகளில் தார்ச்சாலை அமைத்து தருமாறு தஞ்சாவூர் மாவட்ட முதன்மை நீதிபதி மற்றும் துணை நீதிபதிகள் ஆகியோருடன் 02.12.2019 அன்று நடைபெற்ற கூட்ட நடவடிக்கையில் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>கோரியுள்ளதற்கிணங்க, மேற்படி நவநீதபுரம் முக்கிய சாலை/இணைப்பு சாலையில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.16,00,000/—ஐ (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.16,00,000/—க்கு (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.15698/2019/எம்சிஇ4)</td>
<td></td>
</tr>
<tr>
<td>18.12.2019</td>
<td>391.</td>
<td>தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.44 வண்டிக்காரத்தெருவில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து மேற்கூரை அவ்வப்போது இடிந்து விழுவதால் கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவும், புதிய பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.38,50,000/—க்கு (ரூபாய் முப்பத்தி எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 28.08.2019ல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 10.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s. Shanpros Consulting & Contracting (OPC) Pvt. Ltd., Nagapttinam.</td><td>31,73,185.30</td><td>மதிப்பீட்டு தொகையை விட (—) 0.17% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s. G. செந்தில்குமார், தஞ்சாவூர்</td><td>31,97,271.09</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 0.59 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு விலையை விட (—) 0.17% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Shanpros Consulting & Contracting (OPC) Pvt. Ltd., Nagapattinam அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>2) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.11038/2019/எம்சிஇ4)</td><td></td></tr>
<tr><td>18.12.2019</td><td>392. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.40 நடராஜபுரம் 11வது தெருவில் அமைந்துள்ள புதை வடிகால் குழிகளுக்கு இடையில் பிரதான குழாய் இணைப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.0.41 ஆயிரத்திற்கு (ரூபாய் நாற்பத்து ஒன்றாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 08.11.2019ல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 19.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு எஸ்.கோபி,<br>தஞ்சாவூர்</td><td>35,893.95</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–) 0.11% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு எஸ்.ரமேஷ்,<br>தஞ்சாவூர்</td><td>37,155.40</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 3.40 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு விலையை விட (–) 0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எஸ்.கோபி, தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.14319/2019/எம்சிஇ4)</td><td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>18.12.2019</td><td>393. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான ராஜப்பா பூங்கா, கல்லுக்குளம் மற்றும் முனிசிபல் காலனி ஆகிய இடங்களில் இயங்கி வரும் கணினி வரி வசூல் மையத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடை மற்றும் மின் பராமரிப்பு காரணமாக மின்சாரம் இல்லாததால் பொது மக்களுக்கு தீர்வை செலுத்திய இரசீது வழங்க இயலாத நிலை ஏற்படுவதால் மின் தடையின்றி வசூல் செய்திட எதுவாக 1 KVA UPS வாங்கி பொருத்தும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.35,500/–ஐ (ரூபாய் முப்பத்தி ஐந்தாயிரத்தி ஐநூறு மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 25.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s. Cashew System, Thanjavur. | **29,370.00** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.10**% குறைவு |
| 2. | திருமதி G. ஜீவா, தஞ்சாவூர் | **29,550.00** | மதிப்பீட்டு தொகையை விட (+) **0.51** % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு விலையை விட (–) 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Cashew System, Thanjavur அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கு உரிய தொகை ரூ.35,500/–க்கு நிர்வாக அனுமதியும், ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.11451/2019/எம்சிஇ4)

18.12.2019

**394.** தஞ்சாவூர் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 மாநகராட்சியால் பராமரிக்கப்படும் காமராஜ் மார்க்கெட் கட்டிடங்களை மறு உருவாக்கம் செய்யும் பணிகள் Smart City திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்நிலையில் இப்பணிகளை மேற்கொள்ள தடை விதிக்கக்கோரி மார்க்கெட் வியாபாரிகளால் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. அதற்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பாணை எண்.W.P.(MD) 21204/2019, நாள் 23.10.2019படி வரப்பெற்றுள்ள நீதிப்பேராணையில், மேற்படி மார்கெட் பகுதியில் உள்ள கடைகளை 15 தினங்களுக்குள் காலி செய்ய வேண்டும் என தெரிவித்தும், மார்கெட் வியாபாரிகளுக்கு மாற்று இடத்தில் தற்காலிக மார்கெட் அமைத்து தர வேண்டும் எனவும் இதற்கான செலவினத்தினை சீர்மிகு நகர திட்ட நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிமன்ற பேராணையில் தெரிவிக்கப் பட்டுள்ளவாறு, தற்போது காமராஜ் மார்கெட் பகுதியில் இயங்கி வந்த கடைகளை தற்காலிகமாக புதுக்கோட்டை ரோடு பகுதியில் அமைக்கப்பட இருக்கும் தற்காலிக காய்கறி அங்காடியில் WMM-ல் ஆன சாலை வசதிகள் அமைத்து கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.45,00,000/–க்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 05.11.2019ல் வழங்கப்பட்டு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 22.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s. Ugan Construction, Thanjavur. | **37,84,493.15** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.14**% குறைவு |
| 2. | திரு டி.மனோகர், தஞ்சாவூர் | **38,01,626.50** | மதிப்பீட்டு தொகையை விட (+) **0.21** % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு விலையை விட (–) 0.14% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Ugan Construction, தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.14222/2019/எம்சிஇ4)

| 18.12.2019 | 395. | மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாமன்னன் ராஜராஜசோழன் 1034வது ஆண்டு சதய விழா ஒருங்கிணைப்பு கூட்டத்தில் எதிர்வரும் 05.11.2019 மற்றும் 06.11.2019 ஆகிய இரு தினங்களிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட உள்ளதாகவும், வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கலந்து கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு இம்மாநகராட்சி சார்பில் சாலைகளில் எச்சரிக்கை குறியீடுகள் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதனை தொடர்ந்து சோழன் சிலை முதல் மேம்பாலம் வரை உள்ள சாலையிலும், கோவிலுக்கு செல்லும் பாதை, சாலையின் தடுப்பு சுவர் அருகிலும் (Center Median) மற்றும் கோவிலுக்கு முன்புறம் உள்ள வேகத்தடைகளிலும் தெர்மோபிளாஸ்டிக் சாலை குறியீடுகள் (Thermoplastic Road Marking) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 22.10.2019ல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 31.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
|---|---|---|---|

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு டி.மனோகர், தஞ்சாவூர் | **2,49,240.00** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.12**% குறைவு |
| 2. | திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் | **2,51,100.00** | மதிப்பீட்டு தொகையை விட (+) **0.62** % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு விலையை விட (–) 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு டி.மனோகர், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, பெரியகோவில் அவர்களின் ந.க.எண்.1703/2019, நாள் 27.09.2019 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.13373/2019/எம்சிஇ4)

---

**18.12.2019**

**396.** இம்மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட மண்டலம்–IV வார்டு எண்.37ல் அமைந்துள்ள சாந்திவனம் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்து விட்டதால் அங்கு இயங்கப்பட்டு வந்த இயந்திரங்கள் முழுவதும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இந்த நவீன தகன எரிவாயு மேடையினை LPG மூலம் இயங்கும் வண்ணம் மாற்றி அமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.18.00 (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 03.09.2019ல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 20.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s. M.H.T.Engineering, Chennai. | 1322242.95 | மதிப்பீட்டு தொகையை விட (–) **6.97**% குறைவு |
| 2. | M/s. SGS Services, Chennai. | 1418445.08 | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.20**% குறைவு |
| 3. | M/s. KGS Industries, Chennai | 1461138.60 | மதிப்பீட்டு தொகையை விட (+) **2.80** % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு விலையை விட (–) 6.97% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. M.H.T. Engineering, Chennai அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | 2) பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மதிப்பீடு விலை விகிதத்தைவிட 6.97 % குறைவாக விலைபுள்ளி அளித்துள்ளதால் செயற்பொறியாளர் குறிப்பின்படி பணியின் தரத்தினை கருத்தில் கொண்டு 5% PSD மற்றும் 1% ASD தொகையான ரூ.1,08,000/—யை 2.12.2019ம் தேதியிட்ட ICICI, சென்னை வங்கியின் வரைவோலையாக செலுத்தியுள்ளதையடுத்து வேலை உத்திரவு வழங்கியது மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. (ந.க.எண்.9237/2019/எம்சிஇ4) | |
| 18.12.2019 | 397. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 BJ 5052 மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு ஈப்பு வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து M/s. Anaamalais TOYOTA, தஞ்சாவூர் நிறுவனத்திடமிருந்து மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையாக ரூ.10,783/— வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சீர் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.10,783/—ஐ (ரூபாய் பத்தாயிரத்தி எழுநூற்றி என்பத்தி மூன்று மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.10,783/—க்கு (ரூபாய் பத்தாயிரத்தி எழுநூற்றி எண்பத்தி மூன்று மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019—20 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணிக்கு மேற்படி வாகனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s. Anaamalais TOYOTA, தஞ்சாவூர் நிறுவனத்திற்கு தொகை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.14612/2019/எம்சிஇ5) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 18.12.2019 | 398. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 A 6303 (LADDER) வாகனத்தின் பழுதுகளை சீர் செய்து, தகுதிச்சான்று புதுப்பித்து வழங்கும் பணிக்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர்—1 அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/638/2019, நாள் 29.11.2019ன்படி மதிப்பீடுகள் கூர்ந்தாய்வு செய்து பெறப்பட்டதில் மேற்படி பணிக்கு தொகையான ரூ.1,69,209/—ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்றி ஒன்பது மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தானியஙகி பொறியாளர் கடிதம் பதிவு செய்யப்பட்டு அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்து, தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,69,209/—க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்றி ஒன்பது மட்டும்) மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019—20 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர்—1 அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/638/2019, நாள் 29.11.2019 மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும். (ந.க.எண்.5114/2019/எம்சிஇ5) | |
| 18.12.2019 | 399. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான KMS நகர் பூங்காவில் நடைபாதையில் பொது மக்களுக்கு இடையூறாக உள்ள மின் இழுவை கம்பி இடமாற்றம் செய்து தர தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கடிதம் ந.க.எண்.AE/JE/O&M/F.App.Tracking/D.No.152/20, நாள் 03.12.2019, Account Code.61955 Estimate Charges (61904e)-ன்படி ரூ.8,180/—ஐ செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஈஸ்வரி நகர் பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்துவதற்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.4497/2019/எம்சிஇ6) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 18.12.2019 | 400. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.51 நிர்மலா நகரில் 2 எண்ணம் புதிய மின் கம்பங்கள் அமைத்து, 3 மின் கம்பங்களுக்கு தெரு விளக்கு மின்தடம் அமைத்து, 3 எண்ணம் 20 W LED மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின் பகிர்மானம் மற்றும் உற்பத்தி கழகத்திற்கு தொகை செலுத்துவதற்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.13003/2019/எம்சிஇ6) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 18.12.2019 | 401. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் 250 சுகாதார பணியாளர்களைக் கொண்டு சுகாதார பணி Relyon Facility Services Pvt Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணியாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு EPF, ESI, Insurance பாதுகாப்பு உபகரணம், சீருடை மற்றும் ஒப்பந்ததாரரின் நிர்வாக செலவு உட்பட ரூ.366/– வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் 2019–20ம் நிதி ஆண்டிற்கான தினக்கூலி விலை நிர்ணயம் செய்து ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019ன்படி 01.04.2019 முதல் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு செயல்திறனற்ற பணியாளர்களுக்கு ரூ.385/– என நிர்ணயம் செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு EPF, ESI, Insurance பாதுகாப்பு உபகரணம், சீருடை மற்றும் ஒப்பந்ததாரரின் நிர்வாக செலவு உட்பட ரூ.501/– நிர்ணயம் செய்து ஒப்பந்ததாரருக்கு 01.04.2019 முதல் வழங்கிடவும், மேற்படி கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4296/2017/எச்8) | அனுமதிக்கப்பட்டது |
| 18.12.2019 | 402. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு 2019–2020ம் ஆண்டிற்கு பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகல்நலப்பிரிவு மற்றும் பொதுப்பிரிவிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் Stationary பொருட்கள் சப்ளை செய்ய ரூ.20.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.137, நாள் 09.08.2019 அன்று மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி எழுது பொருட்கள் மற்றும் Stationary பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு 26.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 4 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s. Tamil Nadu Multipurpose Indco Serve, Trichirappalli. | 1, 4, 13, 16, 17, 18, 20, 21, 22, 23, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 50, 51 | 17,71,630/–<br>**10.60**% குறைவு |
| 2. | M/s. Trichy Indco Serve, Trichy | 2, 3, 8, 10, 11, 12, 14, 15, 24, 25, 26, 27, 37 | 17,87,338/–<br>**9.81**% குறைவு |
| 3. | M/s. Thanjavur District Printers Service Industrial Co-operative Society Ltd., Thanjavur | 5, 6, 7, 9, 19, 46, 47, 48, 49, 52, 53 | 19,76,775/–<br>**0.25**% குறைவு |
| 4. | M/s. Theni District Printers Service Industrial Co-operative Society Ltd, Theni | ––– | 23,43,025/–<br>**18.23**% அதிகம் |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) ஒவ்வொரு இனத்திற்கும் ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள குறைந்த விலை நிர்ணயத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஏற்கலாம்.<br>2) நிதி நிலையை கருத்தில் கொண்டு தேவைக்கு ஏற்ப ஒப்பந்தததாரர்களுக்கு விநியோக உத்திரவு வழஙகவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) ஒப்பந்தப்புள்ளி பரிந்துரைக்குழு மேற்குறிப்பிட்டுள்ளவாறு குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது. (ந.க.எண்.7432/2019/டி1) | |

நாள் : 24.12.2019
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ பு.ஜானகி இரவீந்திரன்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

// உண்மை நகல் //

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (முகாம் அலுவலகம்)
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 005 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.